ET/SSS/2022(2023)/OL/62/T/Q/S-3

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

G. C. E. Ordinary Level | க.பொ.த. சாதாரண தரம் | **2022 (2023)**

# Student Seminar Series

## மாணவர் கருத்தரங்கு தொடர்

Practice Paper | முன்னோடி வினாப்பத்திரம்

# Civic Education

# குடியியற் கல்வி



**Question Paper - I, II** | **வினாப்பத்திரம் - I, II (மொழிமூலம்-தமிழ்)**

Nenasa

The National e-learning Portal for The General Education

தொலைக்கல்வி மேம்பாட்டு பிரிவு | தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் பிரிவு

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education, Sri Lanka

| 62 | T | I, II |
|---|---|---|

අ. පො. ස. සාමාන්‍ය පෙළ විභාගය - ශිෂ්‍ය සම්මන්ත්‍රණ මාලාව - 2022 (2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரப் பரீட்சை மாணவர் கருத்தரங்கு தொடர்- 2022 (2023)
G. C. E. Ordinary Level Examination – Student Seminar Series - 2022 (2023)

| | |
|---|---|
| පුරවැසි අධ්‍යාපනය | I, II |
| குடியியற் கல்வி | I, II |
| Civic Education | I, II |

පැය තුනයි.
மூன்று மணித்தியாலம்
Three Hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි.
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time – 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.
வாசிப்பு

## குடியியற் கல்வி I

கவனிக்க

- எல்லா வினாக்களுக்கும் விடையெழுதுக.
- 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க
- உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவிற்கும் உரிய வட்டங்களில் உமது விடைக்குரிய இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (x) இடுக.
- அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து அவற்றைப் பின்பற்றுக.

1. கிரேக்கத்தில் அதென்ஸ் நகர அரசுகளில் காணப்பட்ட ஆட்சி முறை
   (1) மறைமுக சனநாயகம் (2) நேரடி சனநாயகம்
   (3) நேரடி மற்றும் மறைமுக சனநாயகம் (4) பிரதிநிதித்துவ சனநாயகம்

2. சனநாயக அரசொன்றில் மக்களிடம் காணப்படும் அதிகாரம்
   (1) சுயாட்சி அதிகாரம் (2) வரையறுக்கப்பட்ட வாக்குரிமை
   (3) இறைமை (4) அதிகார பலம்

3. பல கட்சி முறை நிலவும் நாடுகளைக் கொண்ட விடையாக அமைவது
   (1) இலங்கை, இந்தியா (2) பெரிய பிரித்தானியா, ஐக்கிய அமெரிக்க குடியரசு
   (3) கியூபா, சீனா (4) வடகொரியா, சீனா

4. அரசொன்றின் பிரதான பண்புகளைக் காட்டும் சரியான விடைத் தொகுதியாக அமைவது
   (1) நிலம், சுயாட்சி அதிகாரம், இறைமை அதிகாரம், மக்கள் தொகை
   (2) அரசாங்கம், வாக்குரிமை, மக்கள் தொகை, இறைமை
   (3) மக்கள் தொகை, இறைமை, அரசாங்கம், நிறைவேற்றுத்துறை
   (4) நிலம், மக்கள் தொகை, இறைமை, அரசாங்கம்,

5. கி.பி 15 ஆம் நூற்றாண்டின் பின்னர் ஐரோப்பாவில் முதலாவதாக தோற்றம் பெற்ற தேசிய அரசுகளைக் கொண்ட விடையாக அமைவது
   (1) இங்கிலாந்து, பிரான்ஸ் (2) ஜேர்மனி, இத்தாலி
   (3) ஒல்லாந்து, போர்த்துக்கல் (4) ஜேர்மனி, பிரான்ஸ்

6. இலங்கையில் மாகாண சபைகளுக்கான ஆளுநர்களை நியமிக்கும் அதிகாரம் பெற்றவர்
   (1) முதலமைச்சர் (2) பிரதமர்
   (3) பிரதம நீதியரசர் (4) ஜனாதிபதி

7. பின்வருவனவற்றுள் சட்டத்துறையின் பணியொன்று அல்லாதது எது?

(1) நீதியை நிலைநாட்டல் (2) சட்டங்களை உருவாக்குதல்
(3) நிதி முகாமைத்துவம் (4) நிறைவேற்றுத் துறையை வழிநடத்தல்

8. இலங்கையின் ஜனநாயக சோஷலிச குடியரசு யாப்பின்படி இறைமை அதிகாரமானது மக்களிடமே கையளிக்கப்பட்டுள்ளது. அவ்விறைமை அதிகாரத்தில் உள்ளடங்குவன

(1) சுதந்திரம், சமத்துவம், உரிமைகள்
(2) மக்கட் குழுக்கள், தொழில் , இறைமை அதிகாரம்
(3) இறைமை அதிகாரம், வாக்குரிமை, சுயாட்சி அதிகாரம்
(4) நிர்வாக அதிகாரம், வாக்குரிமை, அடிப்படை உரிமைகள்

- கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு வினா இல 9,10 ஆகிய வினாக்களுக்கு விடையளிக்கவும்

A. பெயரளவு நிர்வாகம், உண்மை நிர்வாகம் என இரு பிரிவுகளைக் கொண்டது.
B. நிறைவேற்றுத்துறை, சட்டத்துறைக்கு நேரடியாக பொறுப்பு கூறவேண்டிய அவசியமில்லை.
C. சட்டத்துறையின் மூலம் நிறைவேற்று துறையை நேரடியாக கட்டுப்படுத்த முடியாது.
D. நிறைவேற்றுத்துறையின் நிறைவேற்று அதிகாரங்களை செயற்படுத்துபவர் ஜனாதிபதியாவார்.
E. சட்டத்துறையின் மூலம் நிறைவேற்றுத் துறை தெரிவுசெய்யப்படும்.
F. சட்டத்துறையினால் நிறைவேற்றுத்துறையை பதவி விலக்க முடியும்.

9. ஜனாதிபதி அரசாங்க முறையின் பண்புகளை மாத்திரம் உள்ளடக்கிய விடையாக அமைவது

(1) ABE (2) ADE (3) BCD (4) DEF

10. பாராளுமன்ற அரசாங்க முறையின் பண்புகளை மாத்திரம் உள்ளடக்கிய விடையாக அமைவது
(1) AEF (2) BCE (3) BCF (4) CDE

11. "எல்லாவகையிலும் அரசியல் அதிகாரம் ஒரு மத்திய அதிகாரபீடத்திடம் மையப்படுத்தப்பட்டிருப்பின் அது ஒற்றையாட்சி முறையாகும்." எனும் வரைவிலக்கணத்தினை முன்வைத்தவர்

(1) பேராசிரியர் காணர் (2) பேராசிரியர் ஐவர் ஜெனிங்
(3) பேராசிரியர் ஹர்மன்.ஜே பைனர் (4) பேராசிரியர் A.V. டைசி

12. பிராந்திய அரசுகள் அல்லது மாநில அரசுகளை 'கென்ரன்கள்' எனும் பெயரால் குறிப்பிடும் நாடு

(1) இந்தியா (2) பெரிய பிரித்தானியா
(3) ஐக்கிய அமரிக்க குடியரசு (4) சுவிற்சர்லாந்து

13. சமஷ்டி ஆட்சி முறை நிலவும் நாடுகளைக் கொண்ட விடையாக அமைவது

(1) ஐக்கிய அமெரிக்க குடியரசு, சுவிற்சர்லாந்து
(2) பிரான்ஸ், பெரிய பிரித்தானியா
(3) ஐக்கிய அமெரிக்க குடியரசு, பெரிய பிரித்தானியா
(4) பெரிய பிரித்தானியா, இலங்கை

14. மத்திய அரசிற்கும், மாகாணசபைகளுக்குமிடையே இணைப்பாளராக செயற்படுபவர்

(1) ஆளுநர் (2) முதலமைச்சர்
(3) ஜனாதிபதி (4) சபாநாயகர்

15 ஐக்கிய அமெரிக்க குடியரசின் மத்திய அரசிற்குரிய அதிகாரமொன்றாக அமைவது
(1) கல்வி (2) நிதி நடவடிக்கை
(3) உள்ளூராட்சி (4) வீடமைப்பு

16. பன்மை பண்பாட்டுச் சமூகமொன்றில் நல்லாட்சியை செயற்படுத்துவதன் மூலம் கிடைக்கும் சாதக விளைவுவொன்று அல்லாதது,

(1) மதபேதங்கள் வளர்ச்சியடைதல்
(2) மனித உரிமைகள் உறுதிப்படுத்தப்படல்
(3) பல்வேறு கலாசாரம் பற்றிய புரிந்துணர்வினை பெற்றுக் கொள்ளல்
(4) இனங்களுக்கிடையே நம்பிக்கையை கட்டியெழுப்புதல்

17. நல்லாட்சியின் அடிப்படை பண்பொன்று அல்லாதது

(1) ஊடகச் சுதந்திரம் பாதுகாக்கப்படல்
(2) அரச நிர்வாகம் வினைதிறனற்று காணப்படல்
(3) வளங்களை வினைத்திறனான வகையில் பயன்படுத்தல்
(4) ஊழல்களற்ற, முறைகேடுகளற்ற ஆட்சி நிர்வாகம்

18. மோதல்கள் தீர்க்கும் முறைகளுள் ஒன்றான இணக்கப்படுத்தலை பயன்படுத்தக் கூடிய சந்தர்ப்பம் ஒன்றாக அமைவது

(1) நிறுவனத்துள் ஏற்படும் மோதல்
(2) இனங்களுக்கிடையிலான மோதல்
(3) ஆட்சியாளருக்கும், பொதுமக்களுக்குமிடையிலான மோதல்
(4) தொழிலாளர் பிரச்சினைகள்

19. உற்பத்தி காரணிகள் அனைத்தும் அரசுடமையாக்கப்பட்டிருக்கும் பொருளாதார முறை

(1) முதலாளித்துவ பொருளாதார முறை
(2) சமதர்ம பொருளாதார முறை
(3) சந்தைப் பொருளாதார முறை
(4) கலப்பு பொருளாதார முறை

20. “உலகமயமாதல்” காரணமாக இலங்கை எதிர்கொண்டுள்ள பாதகமான விளைவுகளில் ஒன்றாக அமைவது

(1) வெளிநாட்டு முதலீடுகள், புதிய தொழினுட்பங்களின் உள்வருகை
(2) உள்நாட்டு விவசாயப் பொருளாதார முறை வீழ்ச்சி கண்டமை
(3) உள்நாட்டு உற்பத்திகளுக்கான கேள்வி அதிகரித்தமை
(4) நவீன தொழினுட்ப உள்வருகை

21 “சட்டம் என்பது இறைமையுடைய அரசியல் அதிகாரத்தால் விடுவிக்கப்படும் கட்டளையாகும் அதனை மீறுவது தண்டனைக்குரிய குற்றமாகும்” இவ்வரைவிலக்கணத்தை முன்வைத்தவர்

(1) T.H. கிரீன் (2) ஜோன் ஒஸ்டீன்
(3) A.V. டைசி (4) H.J லஸ்கி

22. கீழே தரப்பட்டுள்ள குற்றச் செயல்களுள் குற்றவியல் சட்டத்தின் கீழ் தண்டனை வழங்கக்கூடிய குற்றமாக கருதப்படுவது

(1) காணி தொடர்பான பிரச்சினைகள்
(2) ஒப்பந்தம் மீறல் தொடர்பான பிரச்சினைகள்
(3) போதைப்பொருள் பாவனைத் தொடர்பான பிரச்சினைகள்
(4) திருமணம் தொடர்பான பிரச்சினைகள்

23. 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் பிரகாரம் சகல நிர்வாக அநீதிகளிலிருந்தும் பிரஜைகளை பாதுகாக்கும் அதிகாரி எப்பெயரால் அழைக்கப்படுகின்றார்

(1) ஒம்பூட்ஸ்மன் (2) ஆளுநர்
(3) சபாநாயகர் (4) பாராளுமன்ற படைக்களச் சேவிதர்

24. பால்ய வயதினரின் பாதுகாவல் மற்றும் பிறப்புத் தொடர்பான வழக்குகளை விசாரணை செய்யும் நீதிமன்றம்

(1) நீதவான் நீதிமன்றம் (2) உயர் நீதிமன்றம்
(3) மேன்முறையீட்டு நீதிமன்றம் (4) மாவட்ட நீதிமன்றம்

25. இலங்கையில் அதிக அளவிலான நிர்வாக மாவட்டங்களை உள்ளடக்கியுள்ள மாகாணம்

(1) மேல்மாகாணம் (2) மத்திய மாகாணம்
(3) வடமாகாணம் (4) வடமத்திய மாகாணம்

26 .இலங்கையில் இருசபை பாராளுமன்ற முறையினை அறிமுகம் செய்த அரசியல் யாப்பு

(1) கோல்புறூக் (2) குறூமக்கலம்
(3) டொனமூர் (4) சோல்பரி

27. இலங்கையை சுதந்திரமும் தன்னாதிக்கமும், இறைமையும் உள்ள குடியரசாக மாற்றிய அரசியல் யாப்பு

(1)1931- டொனமூர் (2)1947- சோல்பரி
(3) 1972- முதலாம் குடியரசு (4)1978 - இரண்டாம் குடியரசு

28. பின்வருவனவற்றுள் அடிப்படை மனித உரிமையாக கருதப்படுவது

(1) பிறப்பின் போது கிடைக்கப்பெறும் உரிமைகள்
(2) அனைத்து மனிதருக்கும் உரித்தாக வேண்டிய உரிமைகள்
(3) அரசியல் யாப்பின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட உரிமைகள்
(4) சர்வதேச உடன்படிக்கைகளின் மூலம் ஏற்றுக் கொள்ளப்பட்ட உரிமைகள்

29. சிறுவர் பாதுகாப்பு தொடர்பான ஆலோசனைகளை பெற்றுக் கொள்வதற்காக வழங்கப்பட்டுள்ள தொலைபேசி இலக்கம்

(1) 1918 (2) 1919 (3) 1929 (4) 1990

30. அரசியல் அதிகாரத்தை செயற்படுத்தும் அடிப்படைச் சட்டமாக அமைவது

(1) குற்றவியல் சட்டம் (2) அரசியல் யாப்புச் சட்டம்
(3) சிவில் சட்டம் (4) கண்டியச் சட்டம்

31. சூழல் தொகுதியில் உள்ளடக்கப்பட்டுள்ள உயிரற்ற கூறுகளை சரியாக காட்டும் விடைத் தொகுதி

(1) பாறைகள், பக்ரீறியாக்கள் (2) காலநிலை, தாவரம்
(3) வளிக்கோளம், தாவரம் (4) காலநிலை, பாறைகள்

32. அபிவிருத்தியை அளவிடுவதற்காகப் பயன்படுத்தப்படும் அளவைகளுள் நவீன அளவை முறையொன்று அல்லாதது,

(1) மொத்த தேசிய உற்பத்தி (2) மனித வறுமைச் சுட்டி
(3) பசுமை தலா தேசிய உற்பத்தி (4) பௌதீக வாழ்க்கைப் பண்புச் சுட்டெண்

33. அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளை மாத்திரம் கொண்ட விடையாக அமைவது

(1) இந்தியா, சிங்கப்பூர் (2) பங்களாதேஷ், சியாராலியோன்
(3) ஜப்பான், தென்னாபிரிக்கா (4) பெல்ஜியம், உக்ரேன்

34. சமூகச் சூழல் என்பதால் கருதப்படுவது யாது

(1) பௌதீக சூழற் கூறுகளால் கட்டியெழுப்பப்பட்டவையாகும்
(2) மனித தலையீட்டினால் கட்டியெழுப்பப்பட்டவையாகும்
(3) மனித தலையீடின்றி கட்டியெழுப்பப்பட்டவையாகும்
(4) புவியில் காணப்படுகின்ற இயற்கை அம்சமாகும்

35. ஐக்கிய நாடுகள் சபையின் நிரந்தர உறுப்புரிமை கொண்ட நாடுகளை மாத்திரம் கொண்ட விடைத் தொகுதி

(1) பிரித்தானியா, ஐக்கிய அமெரிக்கா, பிரான்ஸ், ஜேர்மனி, ரஷ்யா
(2) சீனா, பிரான்ஸ், பிரித்தானியா, ஐக்கிய அமெரிக்கா, ரஷ்யா
(3) பிரான்ஸ், சீனா, இந்தியா, ரஷ்யா, ஜப்பான், ஜேர்மனி
(4) ரஷ்யா, அவுஸ்திரேலியா, இந்தியா, ஐக்கிய அமெரிக்கா, ஜேர்மனி

36. பன்மை பண்பாட்டுச் சமூகமொன்றில் வாழும் பிரஜை ஒருவரிடத்தில் காணப்பட வேண்டிய பண்பாக அமைவது

(1) வேற்று மதங்களை பின்பற்றுதல்
(2) வேற்றுக் குல திருமணங்களை தவிர்த்தல்
(3) ஏனைய கலாசாரங்களை மதித்தல்
(4) பெரும்பான்மை கலாசாரத்திற்குரிய பண்புகளை பின்பற்றுதல்

37. கி.பி 1776 இல் மனித உரிமைகளை வென்றெடுத்தமை தொடர்பில் முக்கிய வரலாற்று சந்தர்ப்பமாக அமைவது

(1) பிரித்தானிய மக்னா காட்டா உடன்படிக்கை
(2) ரஷ்யப் புரட்சி
(3) பிரித்தானிய மனித உரிமைகள் பற்றிய பிரகடனம்
(4) அமெரிக்க சுதந்திர பிரகடனம்

38. சார்க் அமைப்பில் உள்ளடங்கும் நாடு ஒன்று அல்லாதது

(1) இந்தியா (2) மாலைதீவு (3) ஆப்கானிஸ்தான் (4) மலேசியா

- கீழே தரப்பட்டுள்ள A,B,C,D ஆகிய எழுத்துக்களால் குறிப்பிடப்பட்டுள்ள கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு இல 39 - 40 வரையான வினாக்களுக்கு விடையளிக்கவும்.

A – சட்டத்திற்கு விளக்கமளித்தல்
B – பொது மக்களின் குறைநிறைகளை முன்வைத்தல்
C – மனித உரிமைகளை பாதுகாத்தல்
D – சட்டத்தை இயற்றுதல்
E – சட்ட உருவாக்கத்திற்கான ஆலோசனை வழங்குதல்
F – வரவு செலவு திட்டத்தை தயாரித்தல்

39. நீதி மன்றங்களின் அதிகாரங்களையும் பணிகளையும் மாத்திரம் கொண்ட விடைத்தொகுதி

(1). A,B ,D (2). A,C,D (3). A,C,E (4). B,D,F

40. சட்டத்துறையின் அதிகாரங்களையும் பணிகளையும் மாத்திரம் கொண்ட விடைத் தொகுதி

(1). B,C,F (2). B,D ,E (3). B,D,F (4). B,E,F

*****

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education, Sri Lanka

| 62 | T | I, II |
|---|---|---|

අ. පො. ස. සාමාන්‍ය පෙළ විභාගය - ශිෂ්‍ය සම්මන්ත්‍රණ මාලාව - 2022 (2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தறப் பரீட்சை- மாணவர் கருத்தரங்கு தொடர்- 2022 (2023)
G. C. E. Ordinary Level Examination – Student Seminar Series - 2022 (2023)

පුරවැසි අධ්‍යාපනය I, II
**குடியியற் கல்வி** I, II
**Civic Education** I, II

## குடியியற் கல்வி II

- **முதலாம் வினா** கட்டாயமானது.
- **முதலாம் வினாவுக்கும், வேறு நான்கு** வினாக்கள் உட்பட மொத்தம் **ஐந்து** வினாக்களுக்கு விடையெழுதுக

1.
   (i) தேசிய அரசொன்றின் பிரதான பண்புகள் **இரண்டினைக்** குறிப்பிடுக
   (ii) கடமைகளின் **இரு** பிரிவுகளையும் குறிப்பிடுக
   (iii) உற்பத்திக் காரணிகள் **இரண்டினைக்** குறிப்பிடுக
   (iv) மோதல் ஏற்படுவதற்கான காரணங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக
   (v) குடியியல் சட்டத்தின் கீழ் தண்டனை வழுங்கக்கூடிய குற்றச் செயல்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக
   (vi) சட்டத்தின் ஆட்சி உறுதிப்படுத்தப்பட்ட சமூகத்தில் காணக்கூடிய விசேட அம்சங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக
   (vii) மீட்பாளரிடம் காணப்பட வேண்டிய பண்புகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.
   (viii) உலக வரலாற்றில் மனிதன் தனது உரிமைகளைப் வென்றெடுத்த சந்தர்ப்பங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக
   (ix) பௌதீக வாழ்க்கைச் சுட்டியை தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும் குறிகாட்டிகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.
   (x) சர்வதேச வர்த்தகம் மேற்கொள்ளப்படும் பிரதான முறைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக

(2 x 10=20புள்ளிகள்)

2 . சனநாயக பண்புகள் மக்கள் சமூகத்திற்குள் நிலவுகின்றமை சனநாயக ஆட்சிமுறையின் வெற்றிக்கு காரணமாக அமைகின்றது

   (i) சனநாயக ஆட்சிமுறையில் காணக்கூடிய கட்சி முறைகளின் வகைப்பாடுகள் **இரண்டினைக்** குறிப்பிடுக (02 புள்ளிகள்)
   (ii) சனநாயக மக்கள் சமூகத்தில் பிரஜையொருவரிடம் காணப்பட வேண்டிய முக்கிய பண்புகள் **மூன்றினைக்** குறிப்பிடுக (03 புள்ளிகள்)
   (iii) (a). சனநாயக ஆட்சியின் வெற்றிக்கு எதிர்க் கட்சியினால் ஆற்றப்பட வேண்டிய கடமைகள் **மூன்றினைக்** குறிப்பிடுக (03 புள்ளிகள்)

(b). மேற்குறிப்பிட்ட கடமைகளுள் ஒன்றினை சுருக்கமாக விளக்குக (02 புள்ளிகள்)

3. இனப் பிரச்சினைக்கு தீர்வாக இலங்கையில் மகாணசபை முறை உருவாக்கப்பட்டுள்ளது.

(i) வட மாகாணத்திற்குரிய தேர்தல் மாவட்டங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக (02 புள்ளிகள்)

(ii) இலங்கையில் தற்போது நடைமுறையில் உள்ள உள்ளூராட்சி நிறுவனங்கள் **மூன்றினைக்** குறிப்பிடுக (03 புள்ளிகள்)

(iii) 13 ஆம் சீர்திருத்தத்தின் படி மூன்று நிரல்களின் பிரகாரம் அதிகாரங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

(a). அந் நிரல்கள் **மூன்றினையும்** குறிப்பிடுக (03 புள்ளிகள்)

(b). அதில் ஒரு நிரலுக்குரிய அதிகாரங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக (02 புள்ளிகள்)

4. கலாசாரங்களின் ஒன்றிணைவானது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகும்.

(i) பன்மைப் பண்பாட்டு சமூகத்தின் அடிப்படைப் பண்புகள் **இரண்டினைக்** குறிப்பிடுக (02 புள்ளிகள்)

(ii) இலங்கை பன்மைப் பண்பாட்டுச் சமூகமாக உருவாவதில் செல்வாக்கு செலுத்திய காரணிகள் **மூன்றினைக்** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) (a) ஏனைய கலாசாரத்தினருடன் ஒத்துழைப்புடன் செயற்படுவதனால் உமக்குக் கிடைக்கும் நன்மைகள் **மூன்றினைக்** குறிப்பிடுக (03 புள்ளிகள்)

(b) மேற்குறிப்பிட்ட நன்மைகளில் **ஒன்றினைப்** பற்றி விளக்குக (02 புள்ளிகள்)

5. மனிதர்கள் சமூகமாக ஒன்றிணைந்து வாழும் போது பல்வேறு தேவைகளும் விருப்பங்களும் உருவாகின்றன

(i) மனிதனின் அடிப்படைத் தேவைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) பொருளாதாரமொன்றின் பிரதான செயற்பாடுகள் **மூன்றினைக்** குறிப்பிடுக (03 புள்ளிகள்)

(iii) (a) உலகமயமாதல் காரணமாக உலகப் பொருளாதாரத்தில் காணக்கூடிய பண்புகள் **மூன்றினைக்** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(b) மேற்குறிப்பிட்ட பண்புகளுள் **ஒன்றினைப்** பற்றி சுருக்கமாக விளக்குக. (02 புள்ளிகள்)

6. 1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பில் முன்னர் காணப்பட்ட யாப்பின் அம்சங்கள் சில மாற்றப்பட்டுள்ளன

(i) 1978 ஆம் ஆண்டு யாப்பின்படி இலங்கையின் பாராளுமன்றத்திற்கு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படும் முறைகள் **இரண்டினையும்** குறிப்பிடுக (02 புள்ளிகள்)

(ii) 1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள புதிய அம்சங்கள் **மூன்றினைக்** குறிப்பிடுக (03 புள்ளிகள்)

(iii) (a) 13 ஆம் சீர்திருத்தத்திற்கமைய அதிகார பரவலாக்கத்தின் போது எழும் பிரச்சினைகள் **மூன்றினைக்** குறிப்பிடுக (03 புள்ளிகள்)

(b) மேற்குறிப்பிட்ட பிரச்சினைகளில் **ஒன்றினைப்** பற்றி சுருக்கமாக விளக்குக (02 புள்ளிகள்)

7. சமகாலத்தில் சூழல் மாசடைதலுக்கு மானிட செயற்பாடுகளே பிரதான காரணமாக அமைகின்றன.

(i) நீர் மாசடையும் சந்தர்ப்பங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக (02 புள்ளிகள்)

(ii) சமூகச் சூழலுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் காரணமாக எதிர்கொள்ள வேண்டியுள்ள சவால்கள் **மூன்றினைக்** குறிப்பிடுக (03 புள்ளிகள்)

(iii) (a) பிரஜை ஒருவர் என்ற ரீதியில் பேண்தகு அபிவிருத்திக்காக உம்மால் ஆற்றப்பட வேண்டிய கடமைகள் **மூன்றினைக்** குறிப்பிடுக (03 புள்ளிகள்)

(b) மேற்குறிப்பிட்ட கடமைகளுள் **ஒன்றினைப்** பற்றி சுருக்கமாக விளக்குக (02 புள்ளிகள்)

*****